## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – விடுதிகள் – தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 148 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு கொள்கையளவிலான ஒப்புதலும், 2012–2013–ஆம் ஆண்டில் 84 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அவ்விடுதிகளில் சூரிய எரிசக்தி கருவிகள் நிறுவுவதற்கும் நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.


- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1)துறை**

**அரசாணை (நிலை) எண். 77** **நாள்: 15.6.2012**

**படிக்கப்பட்டது :**

1. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண். சி2/3619/2011, நாள். 14.7.2011.
2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண். பி4/4069/2011, நாள். 22.9.2011.
3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண். சி2/3619/2011, நாள். 23.9.2011.
4. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண். சி2/3619/2011, நாள். 8.12.2011 மற்றும் 17.2.2012.

– – – – –

**ஆணை:**

2011–12–ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. அதன்படி மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 148 விடுதிகளில் விடுதிக் கட்டடம் கட்டுவதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு தயாராக உள்ள 84 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கான பெயர்ப் பட்டியலுடன் செலவினம் குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

| விடுதி அமைவிடம் | விடுதிகளின் எண்ணிக்கை | | | ஒரு விடுதிக்கு செலவுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| | பி.ந | மி.பி.ந | மொத்தம் | | |
| <u>சமவெளி</u><br>50 மாணவர்/ மாணவியர் விடுதிகள் | 47 | 21 | 68 | 62.83 | 4272.44 |
| <u>மலைப் பிரதேசம்</u><br>50 மாணவியர் விடுதி | 1 | – | 1 | 71.37 | 71.37 |
| <u>சமவெளி</u><br>100 மாணவர்/ மாணவியர் விடுதிகள் | 5 | 9 | 14 | 110.55 | 1547.70 |
| 2X100 மாணவர்/ மாணவியர் விடுதிகள் | – | 1 | 1 | 221.10 | 221.10 |
| **மொத்தம்** | **53** | **31** | **84** | | **6112.61** |

**3.** மேலும் பொதுப்பணித்துறை தோராய மதிப்பீட்டில் சூரிய ஒளி மூலம் தண்ணீரை சூடுபடுத்தும் கருவிகளுக்கான செலவினம் சேர்க்கப்பட்டதால் அவை நீக்கப்பட்டு விடுதிகளில் சூரிய எரிசக்தி முறையை நிறுவுவதற்கு பின்வரும் செலவினம் ஏற்படும் என்றும்,

| சூரிய எரிசக்தி கருவிகள் | செலவினம் (MNRE மானியம் கழித்தது போக) |
|---|---|
| 1000 LPD $60^0$ C சூரிய ஒளி மூலம் தண்ணீரை சூடுபடுத்தும் கருவி | 1.91 |
| சூரிய ஒளி போட்டோ ஹோல்டிக் பவர் பிளான்ட் (1 KWP திறன் கொண்டது | 2.04 |
| **மொத்தம்** | **3.95** |

84 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அவ்விடுதிக் கட்டடங்களில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் சூரிய எரிசக்தி கருவிகளை நிறுவுவதற்கும், நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அரசைக் கோரியிருந்தார்.

**4.** மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் நன்கு ஆய்வு செய்து தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 148 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு கொள்கையளவிலான ஒப்புதலும் (In Principle

Sanction) நிலம் தேர்வு செய்யப்பட்டு கட்டுமானப்பணி தொடங்குவதற்கு தயார் நிலையில் உள்ள இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள 84 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாணவ, மாணவியர் எண்ணிக்கைக்கேற்ப சூரிய ஒளி மூலம் தண்ணீர் சூடுபடுத்தும் கருவி பொருத்துவதால் ஏற்படும் செலவினம் கழித்ததுபோக சமவெளிப் பிரதேச 50 மாணவர்கள் தங்கும் விடுதி ஒன்றுக்கு ரூ.62.83 இலட்சம் வீதம் 68 விடுதிகளுக்கு ரூ.4272.44 இலட்சமும், சமவெளிப் பிரதேச 100 மாணவர்கள் தங்கும் விடுதி ஒன்றுக்கு ரூ.110.55 இலட்சம் வீதம் 14 விடுதிகளுக்கு ரூ.1547.70 இலட்சமும், மலைபிரதேச 50 மாணவர்கள் தங்கும் விடுதிக்கு ரூ.71.37 இலட்சமும், சமவெளிப் பிரதேச 200 மாணவர்கள் தங்கும் விடுதிக்கு ரூ.221.10 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.6112.61 இலட்சம் (ரூபாய் அறுபத்து ஒரு கோடியே பன்னிரெண்டு இலட்சத்து அறுபத்து ஓராயிரம் மட்டும்) செலவில் பொதுப்பணித்துறை மூலம் 2012–2013–ஆம் ஆண்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும் மற்றும் அவ்விடுதிகளில் பொதுப்பணித்துறையே தமிழ்நாடு எரிசக்கி மேம்பாட்டு முகமை மூலம் விடுதி ஒன்றுக்கு ரூ.3.95 இலட்சம் செலவில் 84 விடுதிகளுக்கு (திண்டுக்கல் கள்ளர் பள்ளி மாணவர் விடுதிக்கு மட்டும் 2 சூரிய எரிசக்தி கருவிகள்) ரூ.335.75 இலட்சம் செலவில் சூரிய எரிசக்தி கருவிகள் நிறுவுவதற்கும், நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் (ரூ.3786.48 இலட்சம்) :</u>

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II – மாநிலத்திட்டம் JY – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லக் கட்டடங்கள் கட்டுதல் – 16 பெரும் பணிகள்.
(கு.தொ.கு. 4225 03 277 JY 1603)".

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகள் (ரூ.2661.88 இலட்சம்):</u>

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II – மாநிலத்திட்டம் JZ – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லக் கட்டடங்கள் கட்டுதல் – 16 பெரும் பணிகள். (கு.தொ.கு. 4225 03 277 JZ 1601)".

6. மேலே பத்தி 4–ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியினை முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்கள் மேற்கொள்ளுவார்.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்றுக் கொள்வதற்கும், 84 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கும் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இந்த 84 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கான நிலங்களை உடன் பொதுப்பணித்துறையிடம் நிலக் கிரையமின்றி ஒப்படைக்குமாறும், மேற்படி அனைத்து விடுதிகளும் முழுமையாக கட்டப்படும்வரை காலமுறை ஆய்வினை (Periodical Inspection) மேற்கொண்டு கட்டுமானப்பணியின் முன்னேற்றம் மற்றும் தரத்தை உறுதி செய்து கொள்ளுபடியும், பிற்படுத்தப்பட்டோர் நல

இயக்குநர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் ஒப்பளிக்கப்பட்ட வடிவமைப்புகளின்படி கட்டடங்கள் கட்டவும், நடைமுறையிலுள்ள அரசு ஆணைகளின்படி உரிய அலுவலர்களிடம் மேலொப்பம் / அனுமதி பெற்ற பின்னரே கட்டடப் பணிகள் துவங்கப்பட வேண்டும் என்றும் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இத்திட்டத்திற்கான கூடுதல் செலவினத்தை 2012–2013–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த மதிப்பீட்டில் சேர்க்கப்படும். அவ்வாறு சேர்க்கப்படுவதை எதிர்நோக்கி செலவினத்தை மேற்கொள்ள பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இதற்கான முன்மொழிவினை அனுப்பும்போது இத்தொகையையும் சேர்த்து அனுப்புமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

9. இவ்வரசாணை பொதுப்பணித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா. எண். 20/Secy./2012, நாள். 28.2.2012–லும், நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.எண். 7/BC,MBC/DS(VS)/2012, நாள். 13.6.2012–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 370 (முன்னூற்று எழுபது).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

தங்க கலியபெருமாள்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை–5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை–5.
முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை– 5.
மாநிலக் கணக்காயர், சென்னை– 18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை–1), சென்னை– 18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை–2), சென்னை– 18/(பெயரில்).
சம்பந்தப்பட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

**நகல்:**
ஆணையர், சிறுபான்மையினர் நலம், சென்னை– 2.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையிர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (பி.மி.பி./வ.செ.பொது I/பொது II) துறை, சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3/சிநஆபி) துறை, சென்னை– 9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்கள்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்

# இணைப்பு

அரசாணை (நிலை) எண். 77, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 15.6.2012.

| வ. எண். | மாவட்டம் | விடுதிகளின் பெயர் | விடுதிகளில் தங்கும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | | |
| 1. | காஞ்சிபுரம் | பள்ளி மாணவர் விடுதி, காஞ்சிபுரம். | 50 |
| 2. | திருவள்ளூர் | பள்ளி மாணவர் விடுதி, கே.ஜி.கண்டிகை. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, திருவள்ளூர் டவுன். | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, திருவலங்காடு. | 50 |
| 3. | வேலூர் | பள்ளி மாணவர் விடுதி, அணைக்கட்டு. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, சோளிங்கர். | 50 |
| 4. | திருவண்ணாமலை | பள்ளி மாணவர் விடுதி, இறையூர் | 50 |
| 5. | தருமபுரி | கல்லூரி மாணவியர் விடுதி, தருமபுரி. | 100 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, பாப்பிரெட்டிப்பட்டி. | 50 |
| 6. | கோயம்புத்தூர் | பள்ளி மாணவர் விடுதி, செஞ்சேரிமலை. | 50 |
| 7. | நாமக்கல் | கல்லூரி மாணவர் விடுதி, இராசிபுரம். | 100 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, வேலங்கவுண்டம்பட்டி. | 50 |
| 8. | அரியலூர் | பள்ளி மாணவர் விடுதி, ஏலக்குறிச்சி. | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, செந்துறை. | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, சுண்டக்குடி. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, ஏலக்குறிச்சி. | 50 |
| 9. | பெரம்பலூர் | பள்ளி மாணவர் விடுதி, பேரளி. | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, நக்கச்சேலம். | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, குன்னம். | 50 |
| 10. | புதுக்கோட்டை | பள்ளி மாணவர் விடுதி, கரம்பக்குடி | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, இராயவரம். | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, கீரமங்கலம். | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, கோட்டைப்பட்டிணம். | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, அத்தாணி. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, மணல்மேல்குடி. | 100 |
| 11. | கரூர் | பள்ளி மாணவியர் விடுதி, அரவக்குறிச்சி | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, குளித்தலை. | 50 |
| 12. | தஞ்சாவூர் | பள்ளி மாணவர் விடுதி, ஒரத்தநாடு. | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, காசவளநாடுபுதூர் | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, சங்கரனார்குடிகாடு. | 50 |
| 13. | திருவாரூர் | கல்லூரி மாணவியர் விடுதி, மன்னார்குடி. | 100 |
| | | பள்ளி மாணவர் விடுதி, மன்னார்குடி. | 100 |
| 14. | திண்டுக்கல் | பள்ளி மாணவர் விடுதி, தர்மத்தூர்பட்டி. | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, பெரியகோட்டை. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, கோபாலபட்டி. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, திண்டுக்கல். | 50 |

| | | | |
|---|---|---|---|
| 15. | இராமநாதபுரம் | பள்ளி மாணவர் விடுதி, திருவரங்கம். | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, தொண்டி. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, செல்வநாயகன்புரம். | 50 |
| 16. | சிவகங்கை | கல்லூரி மாணவர் விடுதி, காரைக்குடி. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, தேவகோட்டை. | 50 |
| 17. | விருதுநகர் | பள்ளி மாணவர் விடுதி, திருச்சுழி. | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, சாத்தூர். | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, எஸ். அம்மாப்பட்டி. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, சாத்தூர். | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, முத்துராமலிங்கபுரம் | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, அழகியநல்லூர். | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, விருதுநகர். | 50 |
| 18. | தூத்துக்குடி | பள்ளி மாணவர் விடுதி, வேப்பங்காடு (இ), கீழராமசாமிபுரம். | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, ஆனந்தபுரம். | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, கே. தங்காம்மாள்புரம். | 50 |
| 19. | கன்னியாகுமரி | பள்ளி மாணவர் விடுதி, மார்த்தாண்டம். | 50 |
| 20. | நீலகிரி | கல்லூரி மாணவியர் விடுதி, கூடலூர் | 50 |
| <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்</u> | | | |
| 21. | திருவள்ளூர் | பள்ளி மாணவர் விடுதி, கொப்பூர். | 100 |
| 22. | கடலூர் | பள்ளி மாணவர் விடுதி, கம்மாபுரம். | 100 |
| | | பள்ளி மாணவர் விடுதி, கிருஷ்ணபுரம். | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, இருப்புக்குறிச்சி | 100 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, பி. முட்லூர். | 100 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, பேர்பெரியான்குப்பம். | 100 |
| 23. | தருமபுரி | பள்ளி மாணவர் விடுதி, மல்லுபட்டி. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, மாட்லாம்பட்டி. | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, பி. அக்ரஹாரம் | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, இருமாத்தூர் | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, மொரப்பூர். | 50 |
| 24. | சேலம் | பள்ளி மாணவியர் விடுதி, வாழப்பாடி. | 50 |
| 25. | நாமக்கல் | பள்ளி மாணவர் விடுதி, திருச்செங்கோடு. | 50 |
| 26. | பெரம்பலூர் | பள்ளி மாணவர் விடுதி, வேப்பூர். | 50 |
| 27. | கரூர் | பள்ளி மாணவியர் விடுதி, கானியாளம்பட்டி. | 50 |
| 28. | திருவாரூர் | பள்ளி மாணவர் விடுதி, நன்னிலம். | 50 |
| 29. | தேனி | பள்ளி மாணவர் விடுதி, கண்டமனூர் | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, கண்டமனூர் | 50 |
| 30. | இராமநாதபுரம் | பள்ளி மாணவியர் விடுதி, கீழத்துவல் | 50 |
| 31. | சிவங்கை | கல்லூரி மாணவர் விடுதி, காரைக்குடி. | 100 |
| 32. | விருதுநகர் | பள்ளி மாணவர் விடுதி, எம். ரெட்டியப்பட்டி. | 50 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, பாலவநத்தம். | 50 |
| 33. | திருநெல்வேலி | பள்ளி மாணவர் விடுதி, விஸ்வநாதபேரி | 50 |
| | | பள்ளி மாணவர் விடுதி, சோலச்சேரி. | 50 |
| 34. | தூத்துக்குடி | பள்ளி மாணவியர் விடுதி, படுக்கப்பத்து. | 100 |

| | | | |
|---|---|---|---|
| **சீர்மரபினர் நல விடுதிகள்** | | | |
| 35. | புதுக்கோட்டை | கல்லூரி மாணவியர் விடுதி, புதுக்கோட்டை– **II.** | 100 |
| | | பள்ளி மாணவியர் விடுதி, நாகுடி. | 50 |
| 36. | மதுரை (க.சீ.) | பள்ளி (க.சீ.) மாணவியர் விடுதி, கடமலைக்குண்டு, தேனி | 50 |
| | | பள்ளி (க.சீ.) மாணவர் விடுதி, திண்டுக்கல் | 100X2 |
| | | பள்ளி (க.சீ.) மாணவியர் விடுதி, திண்டுக்கல் | 100 |
| 37. | திண்டுக்கல் | பள்ளி மாணவியர் விடுதி, சித்தையன்கோட்டை. | 50 |
| **மொத்த விடுதிகளின் எண்ணிக்கை** | | **84** | |

**தங்க கலியபெருமாள்,**
**அரசு செயலாளர்.**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்.**